1981 ஏப்ரல் 31

## தமிழ்நாட்டில் கருப்புக்கல் கிடைக்குமிடங்கள்

*வினா எண் 624—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கருப்புக்கல் உள்ள இடங்களில் அரசு எடுத்துக்கொண்ட இடம் எத்தனை ?

(ஆ) ஆம் எனில், எடுத்துக்கொண்ட இடங்கள் எவை ?

(இ) இன்னும் எடுக்கப்படாத இடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; (அ), (ஆ) மற்றும் (இ) விடைகள் அடங்கிய *விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம் ; பேரவைத் தலைவரவர்களே, அரசுக்கு தேவைப்படாமலும், அரசால் உபயோகப்படுத்தப்படாமலும் இருக்கின்ற கருப்புக்கல் உள்ள இடங்களை அரசுக்கு வருவாய் வருகின்ற இடங்களை மட்டும் வைத்துக்கொண்டு மீதி இடங்களைத் தனியாருக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப் போன்ற எண்ணம் அரசினிடத்திலே இல்லை.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறுப்புக்கல்லை தமிழகத்திலே இருந்து ஏற்றுமதி செய்வதற்கு தடை இருக்கின்றதா ? ஆனால் ஆந்திரா மூலமாகவும், கர்நாடகா மூலமாகவும், கேரளா மூலமாகவும் இங்குள்ள கற்களை எடுத்துச் சென்று ஏற்றுமதி செய்கிறார்களே, இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, கறுப்புக்கல்லை ஏற்றுமதி செய்வதற்குத் தடையே இல்லை.

## சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு துவக்கப்படும் சிறுதொழில் நிறுவனங்கள்.

*வினா எண் 625—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

---

* 681 ஆம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.